51

பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

- 6 SEP 2021

**அனுப்புநர்**

திருமதி. ர. ராணி, பி.இ., சங்ககிரி.
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427-2448625
Email id: ddslmregion@gmail.com

**பெறுநர்**

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
சங்ககிரி ஊராட்சி ஒன்றியம்,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம்.

02460

ந.க.எண்.2130/2021/சேமா–3 நாள்.31.08.2021

ஐயா,

**பொருள்:** மனைப்பிரிவு – சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – சங்ககிரி வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – கத்தேரி ஊராட்சி/கிராமம் – ச.எண்.304/2பி, 3, 4, 5, 7ஏ, 10ஏ மற்றும் 304/11பி–ல் 4.4614 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**

1. மனுதாரர் திரு. கே. கந்தசாமி மற்றும் எம். கந்தம்மாள் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் 16.07.2021 மற்றும் 26.08.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 28.07.2021 மற்றும் 24.08.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020/போ நாள் 24.12.2020.
4. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
5. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017.
6. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
7. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 23.09.2020.
8. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(1) நாள் 09.12.2020.
9. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 30.08.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள் 08.09.2017.

11. வேளாண்மை இணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் எண் ஈ2/8111/2021 நாள் 05.07.2021.
12. தானபத்திர ஆவண எண் 4818/2021 நாள் 13.08.2021 மற்றும் தானபத்திர ஆவண எண் 4817/2021 நாள் 13.08.2021.

---

1. சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம்/ஊராட்சி ஒன்றியம், கத்தேரி ஊராட்சி/கிராமம், ச.எண்.304/2பி, 3, 4, 5, 7ஏ, 10ஏ, 11பி–ல் 4.4614 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி கோரி பார்வை 1–ல் சுட்டிய 16.07.2021 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 28.07.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 1–ல் சுட்டிய 26.08.2021 நாளிட்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்.4818/2021 நாள் 13.08.2021 மற்றும் TANGEDCO–விடம் தானமாக தானத்திர எண்.4817/2021 நாள் 13.08.2021–ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./மா.(சே) எண்.86/2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 8–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6–ல் கண்ட TNCDBR-2019 விதி எண் 47 (11)–ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department Dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 5–ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1,000/– ஐயும் மற்றும் விதி திண் 9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>நிலப்பயன் மாற்றம் கணக்குத் தலைப்பு</u>

0217 Urban Development
60 Other Urban Development Schemes
800 Other receipts
AS - Receipts under land use conversion charges-27
Non Taxation fees – 09 collections.
(DPC:0217-60-800-AS-2790)

பார்வை 2–ல் கண்ட 24.08.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக நன்னிலை வரி கட்டணம், OSR கட்டணம், கொடிநாள்நிதி மற்றும் TB Fund ஆகிய கட்டணங்கள் உரிய அரசு கணக்குத் தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 8–ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட பார்வை 12–ல் கண்ட தானபத்திர ஆவணம் அசல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் தானபத்திரம் அசல் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி

அலுவலர்(கி.ஊ.), சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

**இணைப்பு**

1. வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 தொகுப்பு)
2. தானபத்திர ஆவண எண் 4818/2021 நாள் 13.08.2021

**நகல்**

| | | |
|---|---|---|
| 1 | திரு. கே. கந்தசாமி,<br>மற்றும் திரு. எம். கந்தம்மாள்,<br>எ.ண்.5, கலைமகள் வீதி,<br>கொமாரபாளையம் அக்ரஹாரம்,<br>கொமாரபாளையம் வட்டம்,<br>நாமக்கல் மாவட்டம். | (பத்தி ஒன்று மட்டும்) |
| 2 | இருப்புக் கோப்பு | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 3 | கோப்பு | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 4 | Tamil Nadu Real Estate<br>Regulatory Authority (TNRERA),<br>No.1A, 1st Floor,<br>Gandhi Irwin Bridge Road,<br>Egmore, Chennai - 600 008. | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 5 | சார்பதிவாளர்,<br>கொமாரபாளையம்<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>நாமக்கல் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 6 | உதவி இயக்குநர்,<br>நில அளவை துறை,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 7 | மேற்பார்வை பொறியாளர்,<br>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும்<br>மின்பகிர்மான கழகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1)<br>தானபத்திரம் ஆவண எண் 4817/2021 நாள் 13.08.2021–ன் அசல் |

ஊராட்சி ஒன்றியம்,
சங்ககிரி.

2

குறிப்பாணை

ந.க.எண். 2386/2021/திட3 நாள்:24.09.2021

**பொருள்:** மனைப் பிரிவு – சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் – கத்தேரி கிராமம் – சர்வே எண்.304./2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/11பி–ல் 4.4614 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்க தெரிவித்தல் – தொடர்பாக.

**பார்வை:**

1. சேலம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2135/2021/சேமா–3 நாள்.31.08.2021
2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2021

------

பார்வையில் காணும் கடிதத்துடன் இணைந்து வரப்பெற்ற சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கத்தேரி ஊராட்சியின் கத்தேரி கிராமம் சர்வே எண்.304./2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/11பி–ல் 4.4614 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான வரைபடத்திற்கு இணைப்பில் காணும் நிபந்தனைக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/– ஐயும் மற்றும் விதி எண்.9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>நிலப்பயன் மாற்றம் கணக்குத் தலைப்பு</u>

0217 Urban Development
60 Other Urban Development Schemes
800 Other receipts
AS- Receipts under land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
(DPC:0217–60–800–AS-2790)

எனவே பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் ஊராட்சியின் மூலம் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு கடிதம் மற்றும் வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இணைப்பு:**

1. பார்வையில் காணும் கடிதம்
2. வரைபடம்
3. தானப்பத்திரம்

24/9/21

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
சங்ககிரி.

பெறுநர்

தலைவர்
ஊராட்சி மன்றம்,
கத்தேரி,
சங்ககிரி ஊராட்சி ஒன்றியம்.

24/9/21

நகல்:
[illegible]

Kaagaz_20211126_130149870239-1.jpg

1:19 PM

67

கத்தேரி ஊராட்சி மன்றம் சங்ககிரி Tk, சேலம் Dt. Pin : 638183 சாமியம்பாளையம்-PO

**சேலம்** மாவட்டம், சங்ககிரி ஒன்றியம்

கத்தேரி ஊராட்சி **மன்றம்,** தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.எஸ்.தமிழ்ச்செல்வி அவர்கள்

ந.க.எண் 001/2021-22 நாள் 18/10/2021

பொருள் : மனைஉட்பிரிவு – சேலம் மாவட்டம்– சங்ககிரி வட்டம்– கத்தேரி ஊராட்சி ச.எண்.304./2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/11பி–ல் 2.80 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடுதல் தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 04.06.2004

2.அரசாணை எண்.79.வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4(3)த்துறை நாள் 04.05.2017

3.அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4(3)த்துறை நாள் 23.09.2020

4.உதவி இயக்குனர் சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்கள் ந.க.எண்.2130–2021 சேமா –3 நாள் 31.08.2021

5.வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், சங்ககிரி ந.க.எண் 2386/2021/தி–3 நாள் 24/09/2021

6.திரு.கு.ஆசைதம்பி சார்பதிவாளர் (பொ) குமாரபாளையம் என்பவர்களின் விண்ணப்பம் ந.க.எண் 466.2021 நாள் 04.10.2021

7.கத்தேரி ஊராட்சி மன்ற தீர்மான எண். 5/256 நாள் 29.09.2021

******

உத்தரவு

பார்வை 4–ல் கண்ட உதவி இயக்குநர் சேலம் மாவட்ட நகர் ஊராமைப்பு அலுவலகம், சேலம் அனுமதி கடிதத்தின் படி, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திற்கு உட்பட்ட கத்தேரி ஊராட்சியில் கிராம சர்வே எண்.304./2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/11பி–ல் 2.80 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு சேலம் மாவட்ட, நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான ம.வ/சேமா எண் 86/2021 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் கத்தேரி ஊராட்சி கிராம சர்வே எண்.304./2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/11பி–ல் 2.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத ( Unclassified Area) பகுதியில் அமைகிறது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உத்தேச மனை உட்பிரிவிற்கான பரப்பு**

**11325 ச.மீ, 2.80 ஏக்கர்**

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு அமையும் (K.K.நகர்) இடத்திற்கு மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 1–ல் காணும் அரசாணையின் படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்கெட் வால்யும்,கட்டணம் செலுத்தப்பட வேண்டும். என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

மனையிட ஒப்புதல் கட்டணம் = 11325 ச.மீ 2,80 ஏக்கர் x Rs.725.ச.மீ =3/100

= 246335

| | |
|---|---|
| 0217- Urban Development -60 Other Urban Development scheme -800 other Receits- AS Receipt under land use conversation - 27 Non Taxation fees-09 Collections. D.P.C-0217-60-800-AS-2790 | சலான் மலம் அரசு தரப்பில் செலுத்தப்பட்டது. சலான் தேதி 15.09.2021 SBI SANKARI |

தற்சமயம், மேற்படி **சங்ககிரி வட்டாரம், கத்தேரி ஊராட்சி கிராம சர்வே எண்.304/2பி,3,4,5,7ஏ,10ஏ மற்றும் 304/1பி-ல் 2.80 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு கத்தேரி ஊராட்சி மன்றம்,** கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு **உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்திர**விடப்படுகிறது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்

1. **பார்வை 4-ல் காணும் உதவி இயக்குனர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின் பற்றப்பட வேண்டும்.**
2. **உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக** அனுமதியின்றி மாற்றியமைத்தல் **கூடாது.**
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்தத அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திரபதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொருப்பாவார்
7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக , மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த/ சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும், பத்திரபதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரபதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

S. Tamil Selvi
18/10/2021

**தலைவர்**
கத்தேரி ஊராட்சி
**கத்தேரி ஊராட்சி**

பெறுதல்,
**திரு.K. சந்தசாமி,**
**திருமதி.K. சந்தம்மாள்,**
**க எண்.5 கலைமகள் வீதி,**
குமாரபாளையம் **அக்ரஹாரம்**
குமாரபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்
1.உதவி இயக்குனர் , சேலம் மாவட்ட **நகர ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு**
2.சார்பதிவாளர் குமாரபாளையம் அலுவலகம் நாமக்கல் **மாவட்டம்,**
3.கத்தேரி ஊராட்சி மன்றம் , சங்ககிரி ஊராட்சி ஒன்றியம்